திறம்பட நிர்வாகத்தை நடத்தியவர் ஆவார். அவர் பல்வேறு புத்தகங்களையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும்முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

24—

கட்டட வசதி

***1458**—**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா, முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் காவல் நிலையம் அரசுக்குச் சொந்தமான சமுதாயநலக் கூடக் கட்டடத்தில் தற்போது இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக 40 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து, 23—9—2010இல் அரசாணை வழங்கப்பட்டது. 24—12—2010இல்

2011 ஆகஸ்ட் 11] [திரு. ஓகே. சின்னராஜ்]

ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. தற்போது 7–6–2011இல் ஒப்பந்ததாரருடன் பணி ஒப்பந்தம், அதாவது Work Agreement போடப்பட்டு புதிய காவல் நிலையம் கட்டுவதற்கான பணிகள் 1–8–2011 அன்று துவங்கப்பட்டுள்ளன. கோட்டூர் காவல் நிலையம் விரைவில் சொந்தக் கட்டடத்தில் இயங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சொன்னதுபோல, காவலர் குடியிருப்பில் ஒரு சமுதாயக் கூடத்தில் இயங்கி வருகிறது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதுபோல, உடனடியாகத் தொடங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என் சார்பிலும், எனது தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

திரு. ஏ. லாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெரியகுளம் தொகுதியில் இதேபோல் பெரியகுளம் நகரத்தில் தென்கரைப் பகுதியில் வாடகைக் கட்டடத்தில் காவல் நிலையம் செயல்பட்டு வருகிறது. பெரியகுளம் நகரத்தில் இருக்கக்கூடிய மாவட்டக் கண்காணிப்பாளர் அலுவலகமும் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அரசு, இந்த இரண்டுக்கும் சொந்தக் கட்டடத்தை உருவாக்கித் தருமா என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–05

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்புதான், இதே பேரவையில், "அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படும்" என்று குறிப்பிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது; அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படுமா?" என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். தற்போது திருத்துறைப்பூண்டி தொகுதி பற்றிய குறிப்புகள்தான் என்னிடத்தில் உள்ளன. தனி வினா எழுப்பினால், பின்னர் பதில் சொல்ல ஏதுவாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், "வாடகைக் கட்டடங்களிலே இயங்கும் காவல் நிலையங்களுக்கெல்லாம் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படும்" என்ற மகிழ்ச்சியான செய்தியை அறிவித்திருக்கின்றார்கள். அதேபோல், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களிடம் கேட்டு அறிய விரும்புவது, ஆங்கிலேயர் காலத்திலிருந்து ஓட்டுக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற சில காவல் நிலையங்களுக்கும், அம்மா அவர்களுடைய ஆட்சியில் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படுமா என்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. லாசர் அவர்களுக்கு மேலும் ஒரு விளக்கம் தர விரும்புகிறேன். உங்கள் மாவட்டத்தில், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் ஏற்கெனவே சொந்தக் கட்டடத்தில்தான் இயங்கி வருகிறது. துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் D.S.P. அலுவலகம்தான் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது கேட்ட கேள்விக்குத் தனி வினா எழுப்பினால் பதில் சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் சொந்த இடத்தில் செயல்பட்டு வரும் தெற்கு வாசல் காவல் நிலையக் கட்டடம் பழுதடைந்துள்ளது.*

அதற்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களின்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை சம்பந்தப்பட்ட கட்டடங்கள் மட்டுமல்ல; தமிழ்நாடு முழுவதும் அரசு சம்பந்தப்பட்ட கட்டடங்கள் பழுதடைந்த நிலையில் இருந்தால், அவற்றைப் புனரமைத்துக் கட்டித் தர வேண்டுமென்பதுதான் இந்த அரசின் நோக்கமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அது படிப்படியாகச் செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

25—

சொட்டுநீர்ப் பாசனம்

***1155—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, புதுவயல் பேரூராட்சியில் மானிய விலையில் சொட்டுநீர்ப் பாசனத் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சொட்டுநீர்ப் பாசனத் திட்டம், சிவகங்கை மாவட்டத்தில் அனைத்து மாவட்டப் பகுதிகளிலும் 2007–2008 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதுவயல் பேரூராட்சிப் பகுதியில், தேவைப்படும் விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் தோட்டக் கலைத் துறை அலுவலர்களைத் தொடர்பு கொண்டால், அரசு மானிய விலையில் சொட்டுநீர்ப் பாசனத்தை அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்.